**THE LABOUR COURT, SALEM**
**CAMP COURT AT DHARMAPURI**
**I.D.No. 82 of 2018**

**01.08.2025**

**RW1 – திரு. குபேந்திரன்**

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை – (மனுதாரர் தரப்பில்)

சாட்சியம் அளிப்பதற்காக எனக்கு அதிகாரக்கடிதம் 18.10.2019 ல் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். Ex.R2,R3 முதல்தகவல் அறிக்கை மற்றும் குற்றப்பத்திரிக்கையில் மனுதாரர் பெயர் எதிரியாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். Ex.R4 ஆவணத்தில் இ மெயில் பதிவிறக்கம் செய்தவரது சான்றொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான். தணிக்கையாளர் சான்றொப்பம் எதுவும் Ex.R5 ஆவணத்தில் இல்லை என்றால் அது ஆன்லைன் காப்பி. அந்த ஆவணத்தை சான்றொப்பமளித்து தணிக்கையாளர் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான்.

Ex.R6 அறிவிப்பு கொடுத்த தேதியான 17.09.2018 அன்று தொகை கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அது வெறும் அறிவிப்புதான்.

வருவாய் துறை உத்தரவில் தொழிலாளர்கள் பிரிவு 33(2) C ன் கீழ் பரிகாரம் காணலாம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் இவ்வழக்கில் உத்தரவு இல்லை. 2018 ல் Gangsaw இயந்திரம் மேம்படுத்தப்பட்டு என்பதை காண்பிக்க Ex.R4 ஆவணத்தை தவிர வேறு ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

2018 ல் ஆட்குறைப்பு செய்யப்பட்ட தொழிலாளர்களின் முதுநிலை பட்டியல் தாக்கல் செய்யவில்லை என்றால் துறையிலுள்ள மொத்த தொழிலாளிகளையும் ஆட்குறைப்பு செய்ததால் முதுநிலை பட்டியல் தாக்கல் செய்யவில்லை. 2018 ல் 5 தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்தோம். நான் தற்போது நிறுவனத்தில் பணியில் இருக்கிறேன் என்றால் சரிதான். மனுதாரர் கடைசியாக பெற்ற ஊதியத்தை காட்டுவதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரரின் விடுப்பு இருப்பு கணக்கு பதிவேட்டையும் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். தொழிலாளர்களின் வங்கிக்கணக்கிற்கு தொகையை பரிமாற்றம் செய்வதற்கு தொழிலாளர்கள் எங்களுக்கு சம்மத கடிதம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

நாங்கள் தொழிலாளர்கள் வங்கிக்கணக்கிற்கு அனுப்பிய தொகையை தொழிலாளர்கள் எங்களுககு திருப்பி அனுப்பினார்கள் என்றால் சரிதான். தொழிலாளர்கள் தொகையை எங்களுக்கு திருப்பி அனுப்பினார்கள் என்றும நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் திருப்பி அனுப்பிவிட்டோம் என்று சொன்னால் சரிதான் சமரச நடவடிக்கை நிலுவையில் இருந்ததால் திருப்பி அனுப்பிவிட்டோம். Ex.R6 ஆட்குறைப்பு அறிவிப்பின் நகல் வேறு எந்த துறைக்கும் அனுப்பப்படவில்லை என்றால் JCL அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது.அவ்வாறு அனுப்பப்பட்டதறகான குறிப்பு ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான்.

17.09.2018 ல் அறிவிப்பு அனுப்பியபோது பிரிவு 2 கே ன் கீழ் தொழிற்தாவா எண்.37/2017 மனு நிலுவையில் இருந்தது என்றால் அப்போது நிலுவையில் இருந்தது தற்போது முடிந்துவிட்டது. மனுதாரர் அதில் தரப்பினர் அல்ல. தொழிலாளர்கள் பணிநிபந்தனைகள் தொடர்பான வழக்கு IESOA.No.1/2017 நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட மேற்படி இரு வழக்குகளிலும் தொழிலாளர்கள் ஆட்குறைப்பு சம்பந்தமாக அனுமதி பெறப்படவில்லை என்றால் சரிதான். 100 தொழிலாளர்களுக்கு குறைவாக இருந்ததால் அனுமதி பெறப்படவில்லை. எங்கள் நிறுவனத்தில் செப்டம்பர் 2017 முதல் செப்டம்பர் 2018 வரை எவ்வளவு தொழிலாளர்கள் பணியில் இருந்தார்கள் என்பதை காட்ட பதிவேடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தொழிற்தகராறு சட்டத்தின் எந்த விதிமுறைகளையும் கடைபிடிக்காமல் தொழிலாளர்களை பழிவாங்கும் நோக்கில் ஆட்குறைப்பு செய்துள்ளது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. ஆட்குறைப்புக்கு சொல்லியுள்ள காரணங்கள் எதுவும் உண்மையல்ல என்றால் சரியல்ல. இயந்திரங்கள் மேம்படுத்தப்பட்டதால் சம்பந்தப்பட்ட தொழிலாளிகளின் சேவை தேவைப்படாததால் ஆட்குறைப்பு செய்யப்பட்டது.

எங்கள் நிறுவனத்தில் எந்த இயந்திரமும் மேம்படுத்ததப்படவில்லை என்றும்

தொழிலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கையை கட்டுப்படுத்த பழிவாங்கவேண்டி சட்ட விரோதமாக ஆட்குறைப்பு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த இரண்டு தொழிற்தாவாக்களில் அனுமதி பெறாமல் செய்யப்பட்ட ஆட்குறைப்பு செல்லாததால் மனுப்படியான பரிகாரம் தரப்படவேண்டும் என்றால் தவறு.

மறுவிசாரணை இல்லை

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem